# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.127/2020**
**PW8**

| | | |
|---|---|---|
| Name | : | மரு. கமலக்கண்ணன் |
| Father's Name | : | கோவிந்தசாமி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.07.2025.
A1 to 7 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது செஞ்சி அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 06.12.2017 அன்று திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவிபேராசியராக பணியில் இருந்தபோது வேட்டவலம்காவல்நிலைய குற்ற எண் . 869/2017 தொடர்புடைய M. சிவா (எ) எமஹா சிவா வயது -34 என்பவரின் பிரேதத்தை பிரேதபரிசோதனை செய்ய காவல் ஆய்வாளரிடம் இருந்து வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டு முதல் நிலைய காவலர் எண் . 793 திரு சி. நந்தகோபால் என்பவரால் பிரேதத்தை அடையாளம் காட்டப்பட்டது . பிரேத பரிசோதனை மதியம் 12.15 மணியளவில் தொடங்கினேன்.

பிரேத பரிசோதனையின் போது உடல் முழுவதும் எறிந்த நிலையில் காணப்பட்டது. வலது முழங்கால் காணப்படவில்லை . இரண்டு தொடைகளும் முழுவதும் எறிந்து கருகிய நிலையில் எலும்புகளும் , தசைகளும் வெளியே காணப்பட்டது. பல தீக்காய எலும்பு முறிவுகள் இரண்டு தொடை எலும்புகளிலும்

காணப்பட்டது. பல தீக்காய எலும்பு முறிவுகள் இடது பக்க மார்பு கூட்டு எலும்பு 6 -12 வரை காணப்பட்டது . இடது கைகள் முழுவதும் எறிந்து கருகிய நிலையில் எலும்புகளும் தசைகளும் வெளியே காணப்பட்டது . இடது கை மற்றும் இடது முழங்கையின் கீழ் இரண்டு பகுதிகள் காணப்படவில்லை . பல தீக்காய கிழிந்த காய்ங்கள் வயிற்றுக்கு முன் காணப்பட்டது. அந்த காயங்களின் துவாரத்தில் இருந்து குடல்கள் வெளியேறி காணப்பட்டது. பிறப்புறுப்பு முழுவதும் கருகி காணப்பட்டது.

இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள்

1. கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் . அதன் ஓரங்கள் சீராகவும் , கன்றியும் , கழுத்திற்கு முன் பகுதியில் காணப்பட்டது. வெட்டுக்காயமானது தாடையின் நடுவில் இருந்து 7.2 செ.மீ கீழேயும் , தொண்டை குழியில் இருந்து 6.8 செ.மீ மேலேவும் காணப்பட்டது. வெட்டுக்காயத்தின் முழு அளவு 14. 5 x 3 செ.மீ. அளவிலும் , வெட்டுக்காயத்தின் வலது பக்கத்தில் 2.4 செ.மீ. வால்போன்று காணப்பட்டது . வெட்டுக்காயத்தின் அடிப்பகுதியில் மென்திசுக்கள், தசைகள், நரம்புகள், குரல்வளை எலும்புகள், உணவுக்குழாய் மற்றும் ரத்தக்குழாய்கள் வெட்டி அதை சுற்றி ரத்த ம் வெளியேறி காணப்பட்டது. நாவடி எலும்பு நல்ல நிலையல் இருந்தது.

2. கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் 2. 5 x 0.5 செ.மீ. அளவில் எலும்பு ஆழம்வரை வலதுபக்கமார்பின் நடு மூன்றாம் பகுதியின் உள்புறத்தில் காணப்பட்டது.

3. கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் 2. 5 x 0.5 செ.மீ. அளவில் எலும்பு ஆழம்வரை வலதுபக்க மார்பின் நடு மூன்றாம் பகுதியின் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

4. கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் 2. 5 x 0.5 செ.மீ. அளவில் எலும்பு ஆழம்வரை வலதுபக்க மார்பின் கீழ் மூன்றாம் பகுதியின் உள்புறத்தில் உடலின்நடுவில் இருந்து 3 செ.மீ தொலைவில் காணப்பட்டது.

5. கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் 2. 5 x 0.5 செ.மீ. அளவில் எலும்பு ஆழம்வரை வலதுபக்க மார்பின் கீழ் மூன்றாம் பகுதியின் உள்புறத்தில் உடலின் நடுவில் இருந்து 4 செ.மீ தொலைவில் காணப்பட்டது.

6. கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் 2. 5 x 0.5 செ.மீ. அளவில் எலும்பு ஆழம்வரை வலதுபக்க மார்பின் கீழ் மூன்றாம் பகுதியின் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

7. கிடைமட்டமாக சாய்ந்த வெட்டுக்காயம் 2. 5 x 0.5 x1 செ.மீ. அளவில் வலதுபக்க வயிற்றின் மேல் மூன்றாம் பகுதியின் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

இருதயம் சாதாரண அளவில் இருந்தது. கூராய்வு செய்ததில் அனைத்து அறைகளும் காலியாக இருந்தது. வால்வுகள் கொரோனரி என்னும் ரத்தக்குழாய் மற்றும் மகாதமனி நல்ல நிலையில் இருந்தது. நுரையீரல்கள் சாதாரண நிலையில் இருந்தது. இடது பக்க நுரையீரல் கருகி காணப்பட்டது . கூராய்வு செய்ததில் வெளிறி காணப்பட்டது. மூச்சுக்குழாய் காலியாக இருந்தது கரித்துகள்கள் எதுவும் காணப்படவில்லை. இரைப்பையில் 90 கிராம் அளவிலான பாதி செறிமானம் ஆன உணவுப்பொருட்கள் எந்தவித நாற்றமும் இல்லாமல் காணப்பட்டது . இரைப்பை சவ்வு நல்ல நிலையில் இருந்தது . கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் சாதாரண அளவில் இருந்தது . கூராய்வு செய்ததில் வெளிறி காணப்பட்டது . சிறுநீரகப்பை காலியாக இரூந்தது. இடுப்பெலும்பு மற்றும் முதுகுத்தண்டுவடம் நல்ல நிலையில் இருந்தது. மண்டை ஓட்டு மேல் தோள் , மண்டைஓடு, மூளைசவ்வு மற்றும் மண்டை ஓடு அடிப்பகுதி நல்ல நிலையில் இருந்தது . மூளை சாதாரண அளவில் இருந்தது . கூராய்வு செய்ததில் நல்ல நிலையில் இருந்தது . உடல் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது . பரிசோதனையின் முடிவில் உடல் உள்ளுறுப்புகளில் எந்தவித நச்சுப்பொருட்களோ , மதுபான பொருட்களோ இல்லை என்று அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கை அ.சா.ஆ. 14. மேற்படி நபர் கழுத்தில் ஏற்பட்ட வெட்டுக்காயத்தினால் உண்டான ரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியால் இறந்திருக்ககூடும் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றிதழ் அ.சாஆ.15. மேற்படி நபர் பிரேத பரிசோதனைக்கு 12-24 மணி நேரத்திற்கு முன் இறந்திருக்ககூடும் . ஒரு நபரை ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் வெட்டுக்கத்தி மற்றும் குத்துக்கத்தியினால் தாக்கினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. அவ்வாறு தாக்கப்பட்ட நபர்மீது மண்ணெண்ணெய் போன்ற எறிபொருட்கள் ஊற்றி எரித்திருந்தால் தீக்காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர்என்னை விசாரித்தார்.

**எதிரி கள் 1 மற்றும் 4 தரப்பில் குறுக்குவிசாரணை -.**

ஆய்வாளர் என்னை என்று விசாரணை செய்தார் என்று ஞாபகம் இல்லை . பிரேத பரிசோதனை செய்த அன்றே பிரேத பரிசோதனை சான்றிதழை வழங்கி விட்டேன். கருத்தும் அன்றைய தினமே கொடுத்தேன் . நான் வழங்கிய சான்றை பற்றி போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை . விசாரணையின்போது போலிசார் என்னிடம் எந்த ஆயுதத்தையும் காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல . போலிசார் என்று அந்த ஆயுதத்தை

காட்டினார்கள் என்று ஞாபகம் இல்லை . நான் இன்றுவரை அந்த ஆயுதங்களை நான் பார்த்தே இல்லை என்று சொன்னால் சரியல்ல . இறந்த நபரின் மீது இருந்த தீக்காயங்கள் எந்த பொருளை பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்டது என்று போலிசார் விசாரிக்கவில்லை. மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்களில் எந்தெந்த காயங்கள் வெட்டுக்கத்தியாலும் , எந்தெந்த காயங்கள் குத்துக்கத்தியாலும் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது. போலிஸ் விசாரணையின்போது இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு எவ்வளவு நேரத்திற்கு முன் விசாரிக்கவில்லை என்றால் வேண்டுகோள் கடிதத்தை பார்த்தால்தான் தெரியும் . பிரேத பரிசோதனை சான்றிழிலும் இறந்த நேரம் குறித்து கருத்து தெரிவிக்கவில்லை என்றால் சரிதான் . உடல் காயத்தின் ஆழம் எவ்வளவு என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . உடல் காயம் தோளலவில் மேலோட்டமாக இருந்து ஆழமற்ற காயம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன காயம் எந்தவித ஆயுதங்களாலும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

(மேற்படி குறுக்கு விசாரணை மற்ற எதிரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.